16—

சுற்றுலாத் தலம்

***52968—திரு. எஸ். தங்கப்பாண்டியன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதியிலுள்ள சாஸ்தாகோவில் அணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ராஜபாளையம் தொகுதியிலுள்ள சாஸ்தாகோவில் அணைப் பகுதி விருதுநகரிலிருந்து சுமார் 78 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சாஸ்தாகோவில் அணைப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவ்விடத்திற்கு வார இறுதி நாட்கள், அரசு விடுமுறை தினங்கள் மற்றும் மே மாதம் முழுவதும் சுற்றுலாப் பயணிகள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். சாஸ்தாகோவில் அணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த, 2021 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி வனத் துறையின் தடையின்மைச் சான்று–NOC, உரிய கருத்துரு மற்றும் விரிவான திட்ட மதிப்பீடு ஆகியவை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஒப்புதல் பெற்று, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சாஸ்தாகோவில் அணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா என்பதை*

2024 பிப்ரவரி 14]
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாஸ்தாகோவில் அருவி, ராஜபாளையத்திலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவிலும், விருதுநகரிலிருந்து சுமார் 78 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இது மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாகும். இந்த சாஸ்தாகோவில் பகுதி, வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அடர்ந்த காடுகளுக்கிடையில் இயற்கை எழில் கொஞ்சும் சிறிய அருவி இங்கு அமைந்துள்ளது. இந்த அருவியில் பருவ காலங்களில் மட்டுமல்லாது, வருடம் முழுவதும் சிறிதளவேனும் நீர்வரத்து இருந்துகொண்டிருக்கும். இந்த அருவிக்கு பருவ காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் மட்டும் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். எனவே, வனத் துறையினரிடமிருந்து தடையின்மைச் சான்று மற்றும் உரிய கருத்துரு மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஒப்புதல் பெற்று, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப சாஸ்தாகோவில் அருவியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்திலுள்ள ராஜபாளையம், நீர்காத்த அய்யனார் கோயில் செல்லும் பாதையில் அருவியின் இடையிலே பாலம் அமைக்க வேண்டும். மேலும், அப்பகுதியில் வரலாறு காணாத வகையில் புகழ்பெற்ற சஞ்சீவிநாதன் கோயிலுக்கு பொது மக்கள் அதிக அளவில் வந்து செல்கின்றனர். ஆகவே, மேற்படி இரண்டு இடங்களிலும் சுற்றுலாத் தலங்கள் அமைக்க*

அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியதுபோல, எல்லாவற்றிற்குமே, எந்தெந்த இடங்களில் சுற்றுலாத் தலங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்த சுற்றுலாத் தலங்கள் பொதுவாக, வனத் துறை, நீர்வளத் துறை, உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, இந்து சமய அறநிலையத் துறை போன்ற துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்தச் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த, தடையின்மைச் சான்று பெற்று, விரிவான திட்ட மதிப்பீடு, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையோடு கருத்துரு கிடைக்கப்பெற்றால், சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

விசைத்தறி கூட்டுறவுச் சங்கம்

***26667—திரு. செ. சுந்தரராஜன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, தாரமங்கலத்தில் விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?